## HOW TO APPLY THROUGH ONLINE

## இணையவழியே விண்ணப்பிப்பது எப்படி

1. Candidates should apply only through online in the Commission's Website(www.tnpsc.gov.in/www.tnpscexams.net/www.tnpscexams.in) விண்ணப்பதாரர்கள் www.tnpsc.gov.in / www.tnpscexams.net / www.tnpscexams.in ஆகிய இணையதளங்கள் மூலம் இணையவழியே மட்டுமே விண்ணப்பிக்கவேண்டும்.
2. **One Time Registration (OTR) and candidate Dashboard are mandatory before applying for any post.**
**எந்தவொரு பதவிக்கும் விண்ணப்பிக்க, ஒருமுறை பதிவு எனப்படும் நிரந்தரப் பதிவு மற்றும் சுயவிவரப்பக்கம் (Dashboard) ஆகியன கட்டாயம் ஆகும்.**
3. For registering in One Time Registration, the candidates should have scanned image of their photograph and signature in CD/DVD/Pen drive as per their convenience.
நிரந்தரப்பதிவில் பதிவு செய்ய விண்ணப்பதாரர்கள் தங்களது புகைப்படம் கையொப்ப நகல் ஆகியவற்றை சிடி / டிவிடி / பென் டிரைவ் போன்றவற்றில் ஏதேனும் ஒன்றை அவரவர் வசதிகேற்ப தயாராக வைத்திருக்கவும்.
4. **Candidates who have already registered in One Time Registration on or before 29.09.2015 shall use their existing user ID and Password to create Candidate Dashboard in the new One Time Registration system.**
**29.09.2015 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ நிரந்தரப்பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்கள், ஏற்கனவே அவர்கள் பெற்றுள்ள பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றைப் பயன்படுத்தி புதிய நிரந்தரப்பதிவு முறையில் தங்களின் சுய விவரப் பக்கத்தினை ஏற்படுத்த வேண்டும்.**
5. **One Time Registration is not an application for any post. It is just collection of information from the candidates and giving a separate dashboard to each candidate to facilitate them to maintain their own profile. Candidate who wishes to apply for any post shall click "Apply" against the post Notified in the Commission's Website and use the same USER ID and PASSWORD given for ONE TIME REGISTRATION.**
**நிரந்தரப்பதிவு என்பது எந்தவொரு பதவிக்கான விண்ணப்பமும் அல்ல. இது விண்ணப்பதாரர்களின் விவரங்களை பெற்று அவர்களுக்கு சுயவிவரப் பக்கம் ஒன்றினை உருவாக்க மட்டுமே இது பயன்படும். எந்தவொரு பதவிக்கும் விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள், தேர்வாணைய இணையதளத்தில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள பதவிகளுக்கு எதிரே "Apply" என்பதை சொடுக்கி, நிரந்தரப்பதிவுக்குரிய பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உள்ளீ டு செய்து விண்ணப்பிக்க வேண்டும்**
6. All candidates have to furnish their correct SSLC Register Number, Month and Year of Passing and Name of the Board, which issued the certificate. Any details found to be wrong, the One Time Registration and Online Application are liable for rejection at any stage.
புதிதாக பதிவு செய்பவர்களும் ஏற்கனவே பதிவு செய்த விண்ணப்பதாரர்களும் உள்நுழையும் போது கேட்கப்படும் எஸ்.எஸ்.எல்.சி பதிவு எண், தேர்ச்சிபெற்ற வருடம் மற்றும் மாதம், சான்றிதழ் வழங்கிய குழுமம் ஆகிய தகவல்களை சரியாக பதிவு செய்ய வேண்டும். மேற்படி விவரங்கள் தவறாக இருப்பின் நிரந்தரப் பதிவும்

தேர்வுக்கான விண்ணப்பமும் எந்தவொரு நிலையிலும் நிராகரிக்கப்பட வாய்ப்புள்ளது.

7. Candidate who have more than one SSLC marks sheets, should enter the details available in the Marks sheets issued after final attempt in which he had passed the SSLC Examination.
   ஒன்றுக்கு மேற்பட்ட எஸ்.எஸ்.எல்.சி சான்றிதழ் வைத்திருப்பவர்கள், தாங்கள் இறுதியாக தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற சான்றிதழில் உள்ள விவரங்களை பதிவு செய்ய வேண்டும்.
8. A valid e-mail ID or Mobile Number is mandatory for registration. Email ID and Mobile Number, should always be kept in active. TNPSC will send all communications and messages through the registered email ID and Mobile Numbers.
   நிரந்தரப்பதிவுக்கு, பயன்பாட்டில் உள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் கைப்பேசி எண் ஆகியவை கட்டாயம் ஆகும். மின்னஞ்சல் முகவரி மற்றும் கைப்பேசி எண் ஆகியவற்றை தொடர்ந்து பயன்பாட்டிலேயே வைத்திருக்க வேண்டும். தேர்வு தொடர்பான செய்திகள் அனைத்தும் விண்ணப்பதாரர் பதிவு செய்துள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் கைப்பேசி எண் ஆகியவற்றில் மட்டுமே அனுப்பப்படும்.
9. Though the candidates furnish details / information in the One Time Registration, the details furnished in the recruitment specific application will alone be taken in to account.
   விண்ணப்பதாரர்கள் நிரந்தரப்பதிவில் தங்களது விவரங்களைப் பதிவு செய்திருந்தாலும், அவர்கள் குறிப்பிட்ட தேர்விற்கு விண்ணப்பிக்கும்போது அந்த விண்ணப்பத்தில் பதிவு செய்யும் விவரங்கள் மட்டுமே அந்த பதவிக்காக / தேர்வுக்காக அவர்கள் தரும் விவரங்களாக எடுத்துக்கொள்ளப்படும்.
10. Please note that all the particulars mentioned in the online application including Name of the Candidate, Post Applied for, Communal Category, Date of birth, Address, Email ID, Centre of Examination etc. will be considered as final. However, candidates can modify certain fields till the date specified for applying online. Certain fields are fixed and cannot be edited even before the closing date. Candidates are hence requested to fill in the online application form with utmost care as no correspondence regarding change of details will be entertained.
    ஒரு குறிப்பிட்ட பதவிக்கான விண்ணப்பத்தில் விண்ணப்பதாரர்கள் தரும் பெயர், விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், சாதிப்பிரிவு, பிறந்த தேதி, முகவரி, மின்னஞ்சல் முகவரி, தேர்வு மையம் போன்ற விவரங்கள் இறுதியானவை என கருதப்படும். இருப்பினும் சில விவரங்களை தேர்வுக்கு விண்ணப்பிக்க கொடுத்துள்ள இறுதிநாள் முன்னரும் கூட மாற்ற முடியாது. எனவே விண்ணப்பதாரர்கள் தங்களது விவரங்களை உள்ளீடு செய்யும் போது மிகுந்த கவனத்துடன் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். நிரந்தரப்பதிவு அல்லது இணையவழி விண்ணப்பம் ஆகியவற்றில் மாற்றம் செய்யக்கோரி பெறப்படும் எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்படமாட்டாது.
11. The Instructions and Illustration regarding One time Registration is given in the website www.tnpscexams.net / www.tnpscexams.in.
    நிரந்தரப்பதிவு குறித்த அறிவுரைகள் மற்றும் விளக்கப்படங்கள் www.tnpscexams.net / www.tnpscexams.in ஆகிய இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.
12. If they already have user ID and Password, they can key in with them. The available OTR particulars will be displayed on the screen. They have to fill up additional details required for specific recruitment application.

பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் பெற்றிருக்கும் விண்ணப்பதாரர்கள் அதனைப் பயன்படுத்தி உள்நுழைந்தவுடன் நிரந்தரப் பதிவில் ஏற்கனவே பதிவுசெய்துள்ள விவரங்கள் திரையில் தெரிய வரும். தேர்வாணையத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் ஒவ்வொரு தேர்வுக்கும் விண்ணப்பிக்கும் போது அதற்குரிய கூடுதலாக தேவைபடும் விவரங்களையும் பதிய வேண்டும்.

13. After submitting details in the application, they can choose any one of the following mode of payment.
    a. Net Banking
    b. Debit Card / Credit Card
    c. Bank Challan
    d. Post Office Challan

    விண்ணப்பத்தில் உரிய விவரங்களைப் பதிவு செய்து சமர்ப்பித்தவுடன் விண்ணப்பதாரர்கள் தங்களது தேர்வுக்கட்டணங்களை செலுத்த கீழ்காணும் ஏதேனும் ஒரு முறையினை தேர்வு செய்யலாம்:-

    அ. இணையவழி செலுத்து முறை
    ஆ. பற்று அட்டை / கடன் அட்டை
    இ. வங்கி செலுத்துச் சீட்டு
    ஈ. அஞ்சலக செலுத்து சீட்டு.

14. If the candidates wish to have immediate fee reconciliation, shall make payment through net banking or Debit Card / Credit Card.

    விண்ணப்பதாரர்கள் தாங்கள் செலுத்திய விண்ணப்பக் கட்டணம் உடனடியாக ஒத்திசைவு செய்யப்பட வேண்டுமாயின் இணையவழி வங்கி சேவை அல்லது பற்று அட்டை / கடன் அட்டை மூலமாக கட்டணங்களை செலுத்தலாம்.

15. Payment made through challan would take atleast two working days for reconciliation.

    செலுத்துச்சீட்டு மூலம் செலுத்தப்படும் கட்டணங்கள் ஒத்திசைவு பெற குறைந்தபட்சம் இரண்டு வேலை நாட்கள் ஆகும்.

16. In case, candidate choose to pay fees through the online payment gateway, an additional page of the application form will be displayed wherein candidates may follow the instructions and fill in the requisite details to make payment.

    விண்ணப்பதாரர்கள் ஒருவேளை இணையவழி கட்டணம் செலுத்தும் முறையை தெரிவுசெய்தால் விண்ணப்பத்தில் கூடுதல் பக்கம் திரையில் தெரிய வரும். அந்த இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளை கவனமாகப் பின்பற்றி தேவையான விவரங்களைப் பதிவு செய்து கட்டணம் செலுத்த வேண்டும்.

17. After submitting your payment information in the online application form, please wait for the intimation from the server, DO NOT press Back or Refresh button in order to avoid payment failure or double charge.

    விண்ணப்ப கட்டணம் விவரங்களைப் பதிவு செய்த பின்னர் அதற்கான விவரம் திரையில் வரும்வரை காத்திருக்கவும். அதுவரை Back அல்லது Refresh ஆகியவற்றை சொடுக்காமல் காத்திருக்கவும். இல்லையெனில் பணபரிமாற்றம் தடைப்படுதல் அல்லது இரண்டாம் முறையாக பணம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படும்.

18. If the online transaction has been successfully completed an Application Number will be generated. Candidates should note their Application Number for future reference in respect of the post applied for.

இணையவழி கட்டணம் செலுத்தும் முறை நிறைவு செய்யப்பட்டவுடன், அந்த தேர்வுக்கான விண்ணப்ப எண் திரையில் தோன்றும். அதனை விண்ணப்பதாரர்கள் அந்தத் தேர்வின் எதிர்காலத் தேவைக்காக குறித்துவைத்துக் கொள்ள வேண்டும்..

19. For offline mode of payment, candidates have to select either Post Office or State Bank of India.
    இணையவழியில்லா கட்டணம் செலுத்தும் முறையை தேர்ந்தெடுக்கும் விண்ணப்பதாரர்கள் அஞ்சலகத்தினையே அல்லது பாரத ஸ்டேட் வங்கியினையோ தேர்வு செய்ய வேண்டும்.
20. On Submission, system will generate the payment challan which the candidate need to take print out and go to the nearest branch of **State Bank of India** or **Post Office** to make the payment.
    கட்டணம் செலுத்தும் முறையை தேர்ந்தெடுத்தவுடன் கணினி உருவக்கும் செலுத்துச்சீட்டினை அச்சிட்டு, அருகிலுள்ள பாரத ஸ்டேட் வங்கியிலோ அல்லது அஞ்சலகத்திலோ கட்டணத்தை செலுத்தலாம்.
21. Commission reserves the right to change the mode of payment at any time without any intimation.
    கட்டணம் செலுத்தும் முறையை தேர்வாணையம் எந்த நேரத்திலும் மாற்றும் உரிமை உண்டு.
22. Kindly collect the candidate's copy of the Fee Payment Challan from the Branch. Please check that the challan is properly signed and the details of Transaction Number, Branch Name and DP Code Number, Deposit Date have been noted in the challan by the Branch authorities.
    பாரத ஸ்டேட் வங்கியிலோ அல்லது அஞ்சலகத்திலோ கட்டணத்தை செலுத்திய பின்னர் விண்ணப்பதாரருக்குரித்தான செலுத்துச்சீட்டின் நகலினை பெற்றுக்கொள்ள வேண்டும். செலுத்துச்சீட்டில் பணம் பெறுபவரின் சரியான கையொப்பம், பண பரிமாற்ற எண், கிளையின் பெயர் வங்கிக்கான குறியீட்டு எண், பணம் செலுத்திய தேதி போன்ற விவரங்கள் சரியாக உள்ளனவா என்று சரி பார்த்துக்கொள்ளவும்.
23. Online Application Registration will be taken as successful one, only if the payment is made either in post office or in State Bank of India within two days from the date of registration.
    விண்ணப்பதாரர்கள் வங்கியிலோ அல்லது அஞ்சலகத்திலோ கட்டணத்தை பதிவு செய்த இரண்டு நாட்களுக்குள் செலுத்தினால் இணையவழி விண்ணப்பம் சரியாக உள்ளதாக கருதப்படும்.
24. Candidates need not send the printout of the online application or any other supporting documents to the Commission. The certificates will be verified only when the candidates come up for next stage of selection.
    விண்ணப்பதாரர்கள் விண்ணப்பநகலினையோ அல்லது சான்றிதழ்களையோ தேர்வாணையத்திற்கு அனுப்பத்தேவையில்லை. விண்ணப்பதாரர்கள் அடுத்தகட்ட தெரிவுக்கு தேர்வானால் மட்டுமே அவர்களின் சான்றிதழ்கள் சரிபார்க்கப்படும்.

Note: / குறிப்பு

I. Candidates are advised in their own interest to apply on-line much before the closing date and not to wait till the last date for depositing the fee/ intimation charges to avoid the possibility of disconnection/inability/failure to log on to the TNPSC's website on account of heavy load on internet/website.
   விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கு விண்ணப்பிக்க குறிப்பிடப்பட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே போதிய கால அவகாசத்தில்

விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏனெனில் கடைசி நாளில் அதிகப்படியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும்போது விண்ணப்பம் சமர்ப்பிப்பதில் தாமதமோ அல்லது தொழில்நுட்ப பிரச்சனைகளோ எழ வாய்ப்புள்ளது.

II. TNPSC does not assume any responsibility for the candidates not being able to submit their applications within the last date on account of the aforesaid reasons or for any other reason beyond the control of TNPSC.

மேற்கூறிய காரணங்களால் விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை கடைசி கட்ட நாட்களில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.

III. Under no circumstances, a candidate should share/mention e-mail ID and Password or Mobile Number of any other person. In case a candidate does not have a valid personal e-mail ID, they should create a new e-mail ID before applying on-line and must maintain that email account.

விண்ணப்பதாரர்கள் தங்களது மின்னஞ்சல் முகவரி, கடவுச்சொல் அல்லது கைப்பேசிஎண் ஆகியவற்றை மற்றவர்களுடன் எந்த ஒரு சூழ்நிலையிலும் பகிர்ந்துகொள்ளகூடாது. விண்ணப்பதாரர்கள் தங்களுக்கென மின்னஞ்சல் முகவரி ஏதுமில்லை எனில் அவர்கள் புதிதாக ஒரு மின்னஞ்சல் முகவரியை விண்ணப்பிக்கும் முன்னர் உருவாக்கிக் கொள்ளவும் அதனைத்தொடர்ந்து பயன்பாட்டில் வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

IV. There is a provision to modify the submitted Online Application. Candidates are requested to make use of this facility to correct their details in the Online Application, if any. This modification facility will be available up to the last date for applying online for the particular post. After this last date, no modification will be permitted. Candidates should take utmost care while filling in the Online Application. Certain fields are fixed and cannot be edited. Candidates are hence requested to fill in the online application form with utmost care as no correspondence regarding change of details will be entertained.

விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்திலுள்ள விவரங்களை தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதிவரை மாற்றிக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடைசி நாளுக்குப் பிறகு அவர்கள் விண்ணப்பத்தில் எந்தவொரு மாறுதலையும் செய்ய இயலாது. மேலும் சில விவரங்களை விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும் மாற்ற இயலாது, எனவே விண்ணப்பதாரர்கள் தாங்கள் விண்ணப்பிக்கும் போது மிகுத்த கவனத்துடன் விவரங்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பத்தில் தவறாக கொடுக்கப்பட்ட விவரங்களை மாற்றிக்கொள்ள வேண்டி விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் எந்தவொரு வேண்டுகோளும் பரிசீலிக்கப்படமாட்டாது.

V. Candidates should carefully fill in the details in the On-Line Application at the appropriate places and click on the "SUBMIT" button at the end of the On-Line Application format. Before pressing the "SUBMIT" button, candidates are advised to verify every particular filled in the application. The name of the candidate or name of his /her father/husband etc. should be spelt correctly in the application as it appears in the

certificates/mark sheets. Any change/alteration found may lead to disqualification of the candidature.

விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள விவரங்களை மிகுத்த கவனத்துடன் உள்ளீடு செய்து விண்ணப்பத்தினை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சமர்ப்பிக்கும் முன்னர் தாங்கள் அளித்த விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளனவா என சரிபார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பதாரர்களின் பெயர், அவர்களது பெற்றோரின் பெயர் ஆகியவற்றை சான்றிதழ்களில் உள்ளபடி மிகச்சரியாக பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேற்படி விவரங்களில் மாற்றங்கள் ஏதுமிருப்பின் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட வாய்ப்புள்ளது.

VI. Request for change/correction in any particulars in the Application Form shall not be entertained under any circumstances AFTER THE LAST DATE FOR Editing/ Updating application details specified. TNPSC will not be responsible for any consequences arising out of furnishing of incorrect and incomplete details in the application or omission to provide the required details in the application form.

விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாளுக்குப்பின்னர் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை மாற்றவேண்டி பெறப்படும் எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தில் தரும் தவறான, முழுமையற்ற விவரங்கள் அல்லது விடுபட்டுப்போன விவரங்களுக்கு தேர்வாணையம் பொறுப்பாகாது,

VII. Commission is not responsible for online payment interruption or failure.

இணையவழி கட்டணம் செலுத்தும் முறையில் ஏற்படும் இடர்பாடுகளுக்கும் தோல்விகளுக்கும் தேர்வாணையம் பொறுப்பாகாது.

VIII. Any clarification may be obtained from the **Help Desks No 8754000961. You can also send us your queries at technicalhelp@tnpscexams.in.**

**கூடுதல் விவரங்கள் அல்லது சந்தேகங்களுக்கு 8754000961 ல் உள்ள உதவி மையத்தையோ அல்லது technicalhelp@tnpscexams.in என்ற மின்னஞ்சல் முகவரியையோ தொடர்புகொள்ளலாம்.**

Secretary / செயலாளர்